திரு. கு. சுப்பராயன்: எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்களுக்கு உரிமை கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள் பிரச்னை குறித்து அமைச்சரின் கவனத்தை ஈர்ப்பதைத் தடுப்பதே குற்றம்.

அடுத்த கவன ஈர்ப்பு.

(ஐ) சிட்கோ தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளை உடமையாக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பொன்முத்து ராமலிங்கம், கே. சொர்ணலிங்கம், துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டம், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வந்தது. மத்திய அரசு, இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளுக்கு கடன் மற்றும் மானியத் தொகையை 1969-ம் ஆண்டு வரை தனிப்பட்ட முறையில் வழங்கி வந்தது. அதன் பின்னர், 1-4-1969-க்குப் பின்னர், இத்திட்டத்திற்கு மாநிலங்களின் வருடாந்திர திட்டத்தின் கீழ் (State Annual Plan) நிதியினை மைய அரசு அளித்தது.

(2) தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுறவுத்துறையின்கீழ் கீழ்க்கண்ட எண்ணிக்கையுள்ள வீடுகள் இதுவரை கட்டுப்பட்டுள்ளன:—

(1)	தனியார் துறை ..	1,206
(2)	வீட்டு வசதி வாரியத்தால் பராமரிக்கப் படுபவை ..	3,046
(3)	'சிட்கோ' நிறுவனத்தால் பராமரிக்கப் படுபவை ..	1,111
(4)	கூட்டுறவுத் துறை	2,459

(3) இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்கு வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. தொழிலாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அல்லது அவர்களது வருமான வரம்பு மாதம் ரூ. 500க்கு மேல் உயரும்பொழுது, தொழிலாளர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விடுகளை காலி செய்ய வேண்டும். ஆனால், நடைமுறையில் இதை பின்பற்ற இயலவில்லை. தற்பொழுது, மிக அதிக எண்ணிக்கையில், ஓய்வு பெற்ற மற்றும் வருமான உயர்வு பெற்ற தொழிலாளர்கள்

தொடர்ந்து வீடுகளில் இருந்து வருகின்றனர். ஆகவே மைய அரசு 1978 மற்றும் 1979ம் ஆண்டுகளில் பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் கீழ் கட்டப் பட்ட வீடுகளை, அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர் களுக்கே விற்று விடலாம் என்று மாநில அரசிற்குப் பரிந்துரை செய்தது. இவ் வீடுகளை அங்கு வசிக்கும் தொழிலாளர்களுக்கே விற்றுவிட்டால், அடுத்து புதிதாக வரும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கிடைப்பது கடினமாக இருக்கும் என்ற காரணத்தால், அவ்வீடுகளை அதில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு விற்கத் தேவையில்லை என்று இவ்வரசு முன்னர் முடிவு செய்தது என்றாலும், தற்பொழுது, அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழி லாளர்கள் அவ்வீடுகளை தமக்கே உடைமையாக்கித்தர வேண்டும் என்று திரும்பத் திரும்ப கோரிக்கையை வலுவாக எழுப்பி வந்ததால் அரசு, அவர்களின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலனை செய்து, இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை அங்கு குடியிருக்கும் உண்மையான, தகுதியுடைய தொழிலாளர் களுக்கு விற்று விடலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அது சம்பந்தமாக ஆணை வெளியிடுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஓ) புதுக்கோட்டை மாவட்டம் நமணசமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்லை விடுவிப்பு நிறுவனமாக அறிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் த. புஷ்பராசு, ஜே. முகம்மதுகனி, கே. கிருஷ்ணமூர்த்தி, மூ. இராசாங்கம், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கையை வைக்கிறேன்.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம் நமணசமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா ஸ்பின்னிங் மில்ஸ் லிட். என்னும் நூற்பாலையில் சுமார் 600 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த ஆலையில் சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி யு.சி.. ஐ.என்.டி.யு.சி., ஏ.டி.பி., எஸ்.பி.எப். ஆகியவற்றைச் சார்ந்த சங்கங்கள் இயங்கி வருகின்றன.

நிதி நெருக்கடி காரணமாக இந்த ஆலை 1985 ஆம் ஆண்டி லிருந்தே முழுமையாக இயங்குவதில்லை. 1985 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு சம்பளம் வழங்கப்படாமலும் 17-5-85 முதல் ஆலையில் வேலை நடைபெறாமலும் இருந்து வந்தது. எனவே